1971 அக்டோபர் 23]

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, திரைப்படக் கொட்டகைகளில் பல மோசடிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் தியேட்டர் உரிமையாளர்களே அனுமதிச் சீட்டு அடிப்பதால் உண்டாகும் ஊழல் குறிப்பிடத்தக்கது. ஆகவே, அரசாங்கமே அனுமதிச் சீட்டுகளை அச்சடித்து கொடுத்தால், இத்தகைய ஊழல்கள் நடக்காமல் இருக்கும். அதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் அவர்களிடத்திலே கேட்கப்படவேண்டிய பல கேள்விகள் என்னிடத்திலே கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால் முதலமைச்சர் என்ற பொறுப்பில் நான் இருப்பதால், அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுவாக, திரைப்பட அரங்குகளில் டிக்கட் மோசடி நடந்து வருவதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமல் இல்லை. எப்படி தடுத்து நிறுத்துவது, ஒழுங்காக எப்படி வரி வசூல் செய்வது என்பதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

பல்லடத்தில் தொழிற்பேட்டைகள்

*38. வினா—திரு. கே. என் குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்லடம் ஒரு வறட்சிப் பகுதியாக தொடர்ந்து நீடிக்கப்படுகிறபடியால் அங்கு சிறு தொழில்கள் நடத்த வேண்டி தொழிற்பேட்டைகள் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த பல்லடம் பகுதி ஒரு விவசாயப் பகுதியாக இருந்தது. அது வறட்சிப் பகுதியாக மாறி விட்டதால், அங்கே விவசாயம் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை. அந்த மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையில், யாராவது சிறு தொழில்கள் நடத்த முன்வந்தால், அவர்களுக்கு தொழிற்பேட்டை அமைத்துத் தர அரசு முன் வருமா? இனி மேலாவது ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி யாராவது முன் வருவார்களே யானால், கூட்டுறவுத் துறையிலானாலும் சரி, நம்முடைய சிறு தொழில் வாரியத்தின் மூலமாகவும் சரி, அவர்களுக்கு கடன் தரப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டம் பொதுவாக முற்போக்கான மாவட்டம் என்ற அடிப்படையில் அங்கே தொழில்கள் ஆரம்பிப்பதற்கான ஆர்வம் அதிகம் காட்டப்படுவதில்லை. கோவை மாவட்டத்தில் பல்லடம், அவினாசி வட்டங்கள் மிகுந்த வறட்சியாக இருப்பதால், அரசாங்கம், கோவை மாவட்டத்தைப் பொதுவான கண்ணோட்டத்தோடு பார்க்காமல், தனிப்பட்ட முறையில் இப்படிப்பட்ட இடங்களுக்கு சலுகை தர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோவை மாவட்டம் முன்னேற்றமான மாவட்டம் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதிலே சில பகுதிகளுக்கு சலுகை தேவை என்று குறிப்பிட்டார்கள். அந்தப்

பகுதியில் யார் தொழில்கள் ஆரம்பிக்க முன் வந்தாலும் நாம் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். உடுமலைப்பேட்டையில் கடன் கொடுத்தது என்ன ஆயிற்று என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்.

கொசூரிலுள்ள ஐயன்குளம்

*39. வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொசூர் ஐயன் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் எப்போது பரிசிலனையில் எடுத்துக்கொள்ளப்பட்டது ?

(இ) வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) குளித்தலை வட்டம், கொசூர் கிராமத்தில் உள்ள ஐயன் குளத்தைப் புதுப்பிக்க 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒரு பூர்வாங்க ஆய்வை உள்ளூர் அலுவலர்கள் நடத்தினார்கள்.

(இ) இத்திட்டம் அரசின் ஒப்பளிப்பைப் பெறுவதற்கு இன்னும் அனுப்பி வைக்கப்படவில்லை. வேலை எப்போது துவங்கப்படுமென இப்பொழுது கூற இயலாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் பொறுப்பு ஏற்ற பிறகு குளம் குட்டைகளை சீர்படுத்துவதில் பொதுப்பணித் துறை அதிக அக்கறை காட்டி வருவதற்காக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் நில ஆர்ஜித நடவடிக்கைகள் ரெவின்யூ துறையால் தாமதமாகிற காரணத்தால் இது போன்ற பணிகள் மிக, மிக தாமதமாகின்றன. ஆகவே, அதற்காக ஒரு காலக்கெடு வைத்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மதிப்பீடு ரூ. 1,50,000 என்று போடப் பட்டிருக்கிறது. அதில் 89 லட்சம் ரூபாய் நில ஆர்ஜிதத்திற்காக ஆகும் என்று சொல்கிறார்கள். எனவே அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. காலக் கெடுவைத்து நடவடிக்கை எடுக்க முயற்சிக்கப்படும்.

சங்கராபுரம் தொகுதியில் முசுகுந்தா நதியின் குறுக்கே அணை

*40. வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சங்கராபுரம் தொகுதியில் முசுகுந்தா நதியில் அணை கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டு நீண்ட நாளாகியும் இன்னும் வேலை துவங்காததின் காரணம் என்ன ?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், லக்கிநாய்க்கன்பட்டி கிராமத்தருகில் முசுகுந்தா நதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்ட ரூ. 12.87 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.